## விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2017

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2008 இன் 02 ஆம் இலக்க விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக நியதிகளின் 27 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் ஆராய்ச்சிக்கூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்களுக்குரிய பயன்தரு ஆயட்காலம் 05 வருடங்களாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யும் போது 10 வருடமாகக் கருதி 10 சதவீதத்தைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 792,989 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவிடப்படாத ஏனைய மூலதனங்களுக்குரிய ரூபா 222,000 பெறுமதியான மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தலில் செலவிடப்பட்ட ஏனையவைகள் மூலதன மானியக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக செலவிடப்பட்ட மூலதனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய மூலதன மானியமாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,600,000 தொகையிலிருந்து வருமானச் செலவினமாக ரூபா 678,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) மூலதன மானியங்களிலிருந்து செலவிடப்பட்ட மீண்டெழும் வடிவிலான செலவினம் ரூபா 1,235,052 தொகை நிதிக்கூற்றுக்களில் வருமானச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குச் சமமான பெறுமதியொன்று வருமானமாக இனங்காணப்படாமையின் காரணமாக, மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அழைப்பு வைப்புகளுக்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,067,546 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா 1,018,023 ஆனமையால் பெறவேண்டிய வட்டி ரூபா 49,523 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டிற்கான வட்டி வருமானம் ரூபா 3,852,691 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அந்த வருமானம் ரூபா 3,958,365 ஆக ரூபா 105,674 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காசுப்பாய்ச்சல் கூற்று பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டில் நிலையான வைப்பு மீளப் பெறுதல் ரூபா 75,324,949 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,537,339 ஆக சீராக்கப்பட்டமையால் காசு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக ரூபா 73,787,610 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 3,968,763 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,958,365 ஆக சீராக்கப்பட்டிருந்தது.

(iii) விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அந்த கடன் தொகைக்குரியதாக விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 730,250 தொகை பெறுவனவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு நிறுவனம் அனுப்பி வைத்த பெறுமதி ரூபா 1,105,000 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட தொகையாக ரூபா 1,041,666 காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 63,334 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 614,319 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தப் பொறுப்புக்கள் அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய வாழைக்கன்று இருப்பு 20,178 ஆக இருந்ததுடன் இருப்பு அலகொன்றின் கிரயம் ரூபா 61.89 ஆனமையால் இறுதியிருப்பின் பெறுமதி ரூபா 1,248,816 ஆக இருந்தது. எனினும், நிதி நிலைமைக் கூற்றில் இறுதியிருப்பாக ரூபா 1,510,073 தொகை காண்பிக்கப்பட்டமையால் இருப்பின் பெறுமதி ரூபா 261,257 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டில் 05 பேரேட்டுக் கணக்குகளின் பேரேட்டின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கும் இடையே ரூபா 1,209,385 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பப்பாசிக் கன்று விற்பனை வருமானத்தை பரீட்சித்த போது மாதாந்த பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 19,435,025 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருமானம் ரூபா 19,367,245 ஆனமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்பனை வருமானத்தில் ரூபா 67,780 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் நிறுவகத்தினால் 06 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான கடன் தொகையில் ரூபா 908,280 மீதியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிராமிய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிறுவகத்தால் இரண்டு நபர்களுக்கு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 208,000 கடன் தொகைகளில் ரூபா 35,860 கடன் மீதியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் போது அந்த பரீட்சைக்குத் தோற்றிய திகதி முதல் 03 மாதங்களுக்குள் அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட 13 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 05 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையிலான காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,201,286 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,828,494 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,029,780 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்களுக்கான காலக்கழிவு ரூபா 13,164,940 இனால் உயர்வடைந்து சென்றமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது அதிகரிப்பிலும் வீழ்ச்சியிலும் தளம்பலொன்றைக் காணக்கூடியதாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 6,301,901 தொகையான மிகை 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 1,201,286 வரை குறைவடைந்திருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 14,477,841 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தளம்பல்களுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 41,806,913 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய தொழில்நுட்பமானி பட்டப் பாடநெறிக்காக பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையை பட்டப் பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்த போது பாடநெறிக்காக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது பதிவு செய்த முதலாம் மற்றும் இரண்டாவது மாணவர் குழுக்களின் எண்ணிக்கை முறையே 60 மற்றும் 67 ஆக இருந்த போதிலும், பட்டப் பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கை முறையே 09 மற்றும் 11 ஆக இருந்தன. அதாவது பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 15 சதவீதம் மற்றும் 16 சதவீதம் ஆன குறைந்த அளவில் பட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் ஒவ்வொரு மாணவர் குழுக்களிலும் பதிவு செய்துள்ள மாணவர் எண்ணிக்கையில் டிப்ளோமா கட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையை விகிதாசார ரீதியாக ஒப்பீடு செய்த போது கடந்த 06 வருட காலத்தில் 06 மாணவர் குழுக்களில் டிப்ளோமா கட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதம் 21 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் அதன் செயன்முன்னேற்றம் தொடர்பான செயலாற்றல் குறிகாட்டிகளையும் பரீட்சித்த போது 37 செயலாற்றல் குறிகாட்டிகளில் எட்டு இல் எந்தவித செயன்முன்னேற்றமும் ஏற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் எதிர்பார்த்த பணிகள் விளைத்திறனாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பப்பாசி கன்றுகளின் மாதாந்த உற்பத்தியை விற்பனையுடன் ஒப்பீடு செய்த போது உற்பத்திக்கு ஒப்பீடாக விற்பனை காணப்படவில்லை. அதன் பிரகாரம் மாதர்த உற்பத்தியில் அதிக கன்றுகளின் அளவு எஞ்சியிருந்தது. வருடம் முழுவதும் மாதாந்த விற்பனை 4 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை குறைந்த பெறுதியைக் கொண்டிருந்ததுடன் இருப்பு மீதி 26.4 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தால் விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் கிராமிய தொழிலமுயற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்திச் செல்லப்பட்டதுடன் அந்தக் கடன் பணத்தை கையளிக்கும் போது விவசாயிகளுக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அந்தக் கடன் பணத்தை மீள அறவீடு செய்தலில் குறித்துரைத்த முறையொன்று காணப்படாமையின் காரணமாக வழங்கப்பட்ட கடனை அறவிடுதல் தொடர்பாக பிரச்சினையான நிலைமையொன்று எழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 26 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 10,120,895 பெறுமதியான அழைப்பு வைப்புக்கள் 2018 செப்தெம்பர் 21 கணக்காய்வுத் திகதி வரையிலும் அவ்வாறு காணப்பட்டதுடன் முதலீடு செய்யப்பட்ட திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெறவேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா 1,067,546 ஆகும். இந்தப் பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் அண்ணளவாக பெறக்கூடியதாக இருந்த வட்டி வருமானம் ரூபா 2,159,874 ஆகும். அதன் பிரகாரம், நிறுவகத்திற்கு அண்ணளாக ரூபா 1,092,328 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 26 உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணி உத்தியோகத்தர்கள் 08 ஆகும். அதன் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணியினரின் வெற்றிடம் 18 ஆகக் காணப்பட்டதுடன் அதில் கல்விசார் பதவியணியில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர், இரண்டு விரிவுரையாளர்கள் மற்றும் தற்காலிக விளக்க விரிவுரையாளர் ஒருவர் (Temporary Demonstrators) என்ற பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் பணிக் கையளிப்பு அடிப்படையில் 55 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்கள் 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரை நிறுவகத்தில் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதற்காக உயர்கல்வி அமைச்சிலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், பதவியணியினர் தேவையை திருத்தாமல் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மிகைத்து 41 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

உயர் கல்வி அமைச்சினால் 60 விடுதிகள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 220,096,952 செலவில் 2014 ஆம் ஆண்டின் போது 100 அறைகளையுடைய 400 மாணவர்களுக்கு தங்கக்கூடிய விடுதியொன்று நிறுவகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது 2014 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்குச் கையளிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் அறைகளின் பாவனை தொடர்பாக பரீட்சிப்பின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த ஆகக்கூடிய அறைகளின் எண்ணிக்கை 32 ஆகக் காணப்பட்டது. நாளொன்றிற்கு ஆகக்கூடியதாக விடுதியில் இந்த மாணவர்களின் எண்ணிக்கை 77 ஆக இருந்ததுடன் மாணவர்கள் தொடர்ச்சியாக விடுதியில் தங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2018 செப்தெம்பர் 28 கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த விடுதியை ஆகக்கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நிறுவகத்திற்கு முடியாதிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தினால் தமது விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெறுகைகள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதிகளை உள்ளடக்கிய விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகைகளை குறிப்பாக இனங்காண முடியாதிருந்ததுடன் திட்டத்துடன் ஒப்பீட்டு செய்ய முடியாமை மற்றும் கால அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டமையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 638,250 பெறுமதியான விரிவுரை மண்டபத்திற்கான 75 கதிரைகளின் கொள்வனவு உரிய பிரிவினால் பொருட்களை கோரிய திகதி முதல் வழங்குனரிடமிருந்து பொருட்கள் கட்டளையிடும் வரையான பெறுகைச் செயற்பாடுகளுக்காக 125 நாட்கள் காலம் எடுத்திருந்ததுடன் ரூபா 58,300 பெறுமதியான அச்சிடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்தலிலும் இந்த செயற்பாடுகளுக்காக 202 நாட்கள் அளவிலான காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டுடன் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது உள்ளக ரீதியில் உழைத்த வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 81.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் 06 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி 44 சதவீதம் முதல் 433 சதவீதம் வரை செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கன்றுகளின் உற்பத்தியும் விற்பனையும் | விற்பனை தொடர்பாக எதிர்வு கூறல்கள் மேற்கொண்டு கன்றுகள் உற்பத்தி செய்யப்படாமை, உற்பத்தியும் விற்பனையும் திட்டமிடப்படாமை, ஏனைய உற்பத்திகளுக்காக உற்பத்தி கணக்கு தயாரிக்கப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | (i) பதவியணியின் தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தப்படாமை மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமை<br>(ii) நிறுவக ஊழியர்களின் ஆளணிக் கோவைகள் சரியான தகவல்களை உள்ளடக்கி பேணிச் செல்லப்படாமை |

| | | |
|---|---|---|
| (இ) | இருப்பு பெறுமதியிடல் | கன்றுகளின் இருப்பு பெறுமதியிடும் கொள்கைகளின் பிரகாரம் இருப்பு பெறுமதியிடப்படப்படாமை. |
| (ஈ) | கடன் கட்டுப்பாடு | கடனை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |